**Reg. No. : ....................................**

**Name : .......................................**

**Code No. 5040**

## Second Year – March 2017

Time : 2 ½ Hours
Cool-off time : 15 Minutes

Part - III

# TAMIL (Optional)

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'cool-off time' of 15 minutes in addition to the writing time of 2 ½ hrs.
- You are not allowed to write your answers nor to discuss anything with others during the 'cool-off time'.
- Use the 'cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- All questions are compulsory and only internal choice is allowed.
- When you select a question, all the sub-questions must be answered from the same question itself.
- Electronic devices except non programmable calculators are not allowed in the Examination Hall.

***பொது வழிமுறைகள் :***

- *விடை எழுதத் தந்துள்ள* 2 ½ *மணிகளுக்கு மேலாகத் தொடக்கத்தில் 15 நிமிடங்கள் 'சிந்தனை நேரமாகத்'* (cool off time) *தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.*
- *இந்நேரத்தினை வினாக்களைப் படித்துப் புரிந்து கொள்ளவும், விடையைத் திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.*
- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.*
- *சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன் படுத்தி விடை எழுதுக.*
- *ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண் அந்தந்த வினாவுக்கு நேர் எதிராகக் கொடுக்கப்பட்டுள்ளது.*

**1** முதல் **10** வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்து எடுத்து எழுதுக. **(Scores : 10 × 1 = 10)**

1. மழைக்குரிய கடவுள்
   (அ) வருணன் (ஆ) முருகன்
   (இ) இந்திரன் (ஈ) கொற்றவை

2. உலகச்சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படும் நாள்.
   (அ) செப்டம்பர் 5 (ஆ) ஜீன் 5
   (இ) ஜீலை 5 (ஈ) ஆகஸ்ட் 5

3. தமிழர் வேளாண் மரபுகள் என்னும் நூலின் ஆசிரியர் யார் ?
   (அ) அறிஞர் அண்ணா (ஆ) இல. சே. கந்தசாமி
   (இ) அருண் பாரதி (ஈ) ஆலங்குடி சோமு

4. முத்தமிழ்க் காப்பியம் என்று போற்றப்படுவது.
   (அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை
   (இ) சீவகசிந்தாமணி (ஈ) கம்பராமாயணம்

5. ‘காவு’ என்பதன் பொருள்
   (அ) மலை (ஆ) சோலை
   (இ) ஆறு (ஈ) வீடு

6. பிளாக் (Blog) என்பதன் தமிழ்ச்சொல்
   (அ) வலைப்பூ (ஆ) இணையம்
   (இ) ஃபேஸ்புக் (ஈ) இமெயில்

7. வீரமாமுனிவருக்குத் தமிழ் பயிற்றுவித்தவர்
   (அ) சுப்பிரதீபக் கவிராயர் (ஆ) வ. வே. சு ஐயர்
   (இ) வேதநாயகம் பிள்ளை (ஈ) உ. வே. சாமிநாத ஐயர்

8. சரியான சொல்லைத் தேர்வு செய்க
   (அ) இனையதளம் (ஆ) இணையதலம்
   (இ) இணையதளம் (ஈ) இணயதளம்

9. எலும்பு என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான மலையாளச் சொல் எது ?
   (அ) எலு (ஆ) எல்
   (இ) என்பு (ஈ) எலுபு

10. குழுப்பேட்டி என்று அறியப்படுவது
    (அ) கருத்துப் பேட்டி (ஆ) செய்திப் பேட்டி
    (இ) தனிநபர் பேட்டி (ஈ) விளக்கப் பேட்டி

**11** முதல் **14** வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக.

**(Scores : 4 × 1 = 4)**

11. அழகின் சிரிப்பு – நந்தலாலா

12. நகரம் – கவிஞர் அறிவுமதி

13. தேடல் – கல்யாண்ஜி

14. இறந்தகாலம் – பாரதிதாசன்

**15** முதல் **18** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **மூன்று** கருத்துகள் அமையும்படி விடை எழுதுக. **(Scores : 4 × 3 = 12)**

15. விழிப்பு என்ற சிறுகதையின் சூழலியல் கண்ணோட்டத்தை விளக்கி எழுதுக.

16. “பாடுபடுபவனுக்கும் ஓய்வு நேரம் வேண்டும்” என்ற கருத்தினை மையப்படுத்திக் குறிப்பு வரைக.

17. “அன்பின் விதைகள்” கதையின் மையக் கருத்தினை விளக்குக.

18. திரைப்படம் பார்ப்பதால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பட்டியலிடுக

**19** முதல் **23** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக. **(Scores : 5 × 4 = 20)**

19. தாய்மொழிக் கல்வியின் சிறப்புக் குறித்துச் சொற்பொழிவு உரை தயாரிக்க.

20. “நிலந்திருத்தி நெல்விளைத்து

    நீணிலத்தை வாழுவிப்போன்

    உலர்ந்த வயிற் றோடுலவுகின்றான் - அவன்

    உடலுலர்வை என்று புவிகாணும் ?” - இக்கவிதைப் பகுதியை நயம் பாராட்டி விளக்குக.

21. “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” - என்ற தொடர் உணர்த்தும் சமதர்ம சிந்தனையை எடுத்துரைக்க.

22. மொழிப் பற்றுக் குறித்து இராசேந்திர சோழனின் கருத்துகளை அடியொற்றி விளக்குக.

23. தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்களின் பங்கு குறித்துச் சிறு குறிப்பு எழுதுக

**24 – 25** வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **ஐந்து** கருத்துகள் அமையும்படி விடை எழுதுக. **(Scores : 5 × 2 = 10)**

24. சுற்றுச்சூழல் மாசடைவதற்கான காரணங்கள் குறித்துச் சுற்றுச்சூழல் தின விழாவில் உரையாற்றுவதற்கான உரை தயாரிக்க.

25 இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஊடகங்களின் தாக்கம் குறித்துச் சிறு கட்டுரை எழுதுக.

**26** முதல் **28** வரையிலான வினாக்களுக்கு, இருபக்கங்களுக்கு குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக. **(Scores : 3 × 8 = 24)**

26. காலந்தோறும் தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்க

**(அல்லது)**

தமிழ் வளர்ச்சியில் மேலைநாட்டாரின் பங்களிப்பு குறித்துக் கட்டுரை வரைக.

27. “தேசிய ஒருமைப்பாடு” - என்னும் தலைப்பில் சொற்பொழிவு உரை தயாரிக்க.

**(அல்லது)**

மனிதநேயம் குறித்து அறிஞர்கள் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

28. ‘நவீன தொழில் நுட்பங்கள் நமது பண்பாட்டின் மீது தாக்கம் செலுத்துகின்றன’ - இக்கருத்தோடு உடன்படுகிறாயா ? காரண காரியத்துடன் விளக்குக.

**(அல்லது)**

‘உழைப்போம் உயர்வோம்’ என்னும் தலைப்பில் பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவதற்கான கட்டுரை எழுதுக.